**சார்பு நீதிமன்றம், அரூர்**

**நாள் – 09.02.2026**

**OS.82/2024**

**வா.சா.1 திரு.நடராஜன்**

**வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**1 முதல் 3 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து யார் சம்பாதித்தது என்றால் எனது தாத்தா ஜடையன் என்பவர் சம்பாதித்த சொத்து. ஜடையன் என்பவர் சம்பாதித்தார் என்பதற்கு ஏதாவது ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தந்தை கந்தன் என்பவருக்கு சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால் எனது தந்தையின் தந்தை வழியாக வந்து எனது அப்பாவிற்கு பட்டா வந்துவிட்டது. தந்தைவழியாக வந்ததில் ஜடையனுக்கு எவ்வளவு சொத்து பாத்தியம், ஜடையனின் மற்ற வாரிசுகளுக்கு எவ்வளவு சொத்து பாத்தியம் என்றால் ஜடையனின் மகன்கள் 4 பேர், 1. நாராயணன், 2. கந்தன், 3. வேலாயுதம், 4. காசி ஆகியோர், வேலாயுதம் என்பவர் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை வேறுஒருவருக்கு விற்றுவிட்டு திருவண்ணாமலை மாவட்டம், சென்றுவிட்டார். ஜடையனின் மகன்களான 1. நாராயணன், 2. கந்தன், 3. வேலாயுதம், 4. காசி ஆகியோருக்கு எப்போது பாகப்பிரிவினை ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. எனது தாத்தா ஜடையன், எனது அப்பா கந்தன் ஆகியோரின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஜடையனின் வாரிசு சான்றிதழ் ஒப்படைக்காததால் மேற்படி 4பேர் மட்டுமே இறந்துபோன ஜடையனுக்கு வாரிசு என்று ஏற்றுக்கொள்ளமுடியாது என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பா கந்தன் வாரிசுசான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தாத்தா ஜடையனின் வாரிசுகள் பற்றியும், எனது தந்தை கந்தன் பற்றியுமான வாரிசு சான்றிதழ் ஒப்படைக்காததால் இந்த வழக்கில் வாரிசுகள் பற்றி நிரூபணம் செய்யாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. எனது தந்தை எந்த தேதியில் இறந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் தேதி நினைவில்லை.

3. நாராயணனுக்கு திருமணம் ஆகவில்லை, அவருக்கு வாரிசு ஏதும் இல்லை, என்று சொல்வதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. காசி சொத்து குறித்து ஏன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் காசி உயிருடன் இருக்கும்போது எங்களுக்கு அவர் சொத்தை விற்றுவிட்டார் அதனால் அந்த சொத்தை வழக்கில் சேர்க்கவில்லை. காசியிடம் வாங்கிய சொத்து பற்றிய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காசிக்கு கண்பார்வை தெரியாது என்றால் சரியல்ல, அவருக்கு முதலில் 80 வயது வரை நன்றாக கண்பார்வை இருந்தது, பின்னர்தான் கண்பார்வை சரியாக தெரியவில்லை. காசி எப்போது இறந்தார் என்றால் அது எனக்கு

நினைவில்லை. காசி கண்பார்வை தெரியாத பிறகுதான் சொத்தை அவர் விற்பனை செய்தார் என்றால் சரியல்ல, அவர் கண்பார்வை நன்றாக இருக்கும்போதே சொத்தை விற்பனை செய்துவிட்டார். காசிக்கு கண்பார்வை தெரியாதபோது தான் அவர் சொத்தை நாங்கள் எழுதி வாங்கிக்கொண்டோம் என்றால் இல்லை.

4. தாவா சொத்தை எல்லாம் பொதுவாகதான் ஓட்டிவருகிறோமா என்றால் ஆமாம். நான் எப்போது பாகம் கேட்டேன் என்றால் 2 வருடத்திற்கு முன்பு. அப்போது யார் என்ன சொன்னார்கள் என்றால் கிராமத்தில் உள்ளவர்கள், எனது அப்பா சொத்திற்கு எனக்கு உரிமை இல்லை என்றும் வாங்கிய சொத்துக்கு மட்டும்தான் உரிமை என்றும் சொல்லிவிட்டார்கள். காசியின் சொத்தை ஏமாற்றி வாங்கிக்கொண்டேன் அதையும் சேர்த்து பிரித்து கொள்ளலாம் என்று ஊர்காரர்கள் சொன்னார்கள் என்றால் சரிதான். அவ்வாறு சொன்னதை ஒப்புக்கொள்ளாமல்தான் நான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தார்சாலையை ஒட்டிதான் எனது நிலம் உள்ளது என்றால் சரிதான். தார்சாலையை பார்த்தவாறு கிழமேலாக பிரிக்க நான் ஒப்புக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல, ஒப்புக்கொண்டேன், கையெழுத்து போட்டுவிட்டு செல்ல சொன்னார்கள் அதனால் ஒப்புகொள்ளவில்லை.

5. தாவா சொத்தில் வீடு உள்ளதா என்றால் என்னுடைய வீடு, ரங்கநாதன் வீடு, சென்னகிருஷ்ணன் வீடு ஆகிய 3 பேர் வீடும் உள்ளது. அந்த 3 வீட்டை பற்றி நீதிமன்ற வழக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றால்

இல்லை. அந்த வீடு பொதுகூட்டுக்குடும்ப சொத்து என்பதால் அதனை இவ்வழக்கில் காண்பித்திருக்கவேண்டும் அதனால் இந்தவழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. வழக்கில் பொதுகூட்டுக்குடும்ப சொத்து என்பது பற்றியும் எந்த ஆவணங்களும் நிரூபிக்க தாக்கல் செய்யாததாலும், தாவா சொத்தில் உள்ள வீடுகளையும் இவ்வழக்கில் காண்பிக்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.09 17:05:39 +0530